DEPOSITION OF WITNESS

IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, KADALADI.

Case No.CC.8/2021

Prosecution witness – PW 5

| | | |
|---|---|---|
| Name | : திரு.முனியாண்டி | Caste: |
| Father's Name | : | Calling: |
| Village | : | Religion: |
| Taluk | : | Age: |

(Accused absent. Petition filed u/s.317 Cr.P.C and allowed.)
13.11.2025 at 01.05 A.M.

<u>முதல் விசாரணை</u>

1. நான் தற்போது அபிராமம் காவல் நிலையத்தில் தலைமைக்காவராக பணிபுரிந்து வருகிறேன்.

2. நான் கடந்த 2020ம் ஆண்டு கடலாடி காவல் நிலையத்தில் இரண்டாம் நிலைக் காவலராக பணிபுரிந்து வந்தேன். அந்த சமயம் கடந்த 12.03.2020ந் தேதி காலை 11.00 மணியளவில்நிலைய பணியில் இருந்த போது காவல் ஆய்வாளர் நிலைய குற்ற எண் 43/2020 சட்டப்பிரிவுகள் 279, 304(A) வாகன விபத்து வழக்கில் இறந்து போன சந்தானம் என்பவரது பிரேதத்தை பிரேத பரிசோதனை செய்ய காவல் ஆய்வாளர் அளித்த வேண்டுகோள் கடித்தினை பெற்று கடலாடி அரசு மருத்துவமனை சென்று அங்கு சவக்கிடங்கில்வைக்கப்பட்டிருந்த மேற்படி இறந்து போனவரின் பிரேதத்தை பணி மருத்துவரிடம் அடையாளம் காட்டி அன்று 13.15 மணிமுதல் 14.15 மணிவரை பிரேத பரிசோதனை செய்யப்பட்டு நான் உடன் இருந்து பிரேத பரிசோதனை முடித்து இறந்தவரின் பிரேத பரிசோதனை முடித்து இறந்தவரின் பிரேதத்தை குல வழக்கப்படி நல்லடக்கம் செய்ய அவரது உறவினர்களிடம் ஒப்படைத்து நிலையம் வந்து அறிக்கை செய்தேன். இது சம்மந்தமாக என்னை காவல் ஆய்வாளர் விசாரித்தார்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>** :

1. இவ்வழக்கு சம்பவத்தில் இறந்தவரையோ, எதிரியையோ வழக்கு சம்பவத்தில் முன்னர் எனக்கு தெரியாது என்றால் சரிதான். என்னிடம் காவல ஆய்வாளர் கொடுத்த வேண்டுகோள் கடிதத்தை மருத்துவரிடம்பிரேத பரிசோதனை செய்ய கொடுத்ததை தவிர வேறு விபரங்கள் இந்த வழக்கு சம்மந்தமாக எனக்கு தெரியாது என்றால் சரிதான். இறந்த நபரின் உடலை நான் பார்த்தேன் என்றால்

சரிதான். இறந்த நபருக்கு எத்தனை வயது இருக்கும் என்றால் சுமார் 70 வயது இருக்கும்.

சாட்சி அரசு, எதிர் தரப்பு வழக்கறிஞர்கள் முன்னிலையில் திறந்த நீதிமன்றத்தில் கூறிய விபரங்களை நான் சொல்லச் சொல்ல தட்டச்சர் தட்டச்சு செய்த விபரங்கள் சாட்சிக்கு படித்துக் காட்டி அவரால் சரியென்று ஒப்புக் கொள்ளப்பட்டது.

மா.உ.ம.நீ.ந, கடலாடி